175113

திருப்போரூர் ஆண்டவர் இரட்டைமணிமாலை

Q26:38 ·2112TK
N14
175113

உ

வேலுமயிலுந் துணை.



திருப்போரூர் ஆண்டவர்
இரட்டைமணிமாலை.

இது
சென்னை அடைக்கலபுரம்
நிவாஸரா ம-ள-ா-ஸ்ரீ,
த. மதுரை பிள்ளையவர்கள்
குமாரரும்,
சென்னைப் பூலோகவியாஸன் பத்திராதிபர்
மஹாஞானபாநு சதாவதானம்
ஸ்ரீலஸ்ரீ பூ. மு. நாவலரவர்கள்
மாணவகருமாகிய
மதுரை-எல்லப்ப பிள்ளை
அவர்களாலியற்றி

கையொப்பகாரரின் உதவியால்
பூலோகவியாஸன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

[illegible] 20உ கிருத்திகைப்போது ஷை சந்நி
[illegible]ல் விநியோகிக்கப்பட்டது

970
OFFICE OF THE REGISTRAR
REGISTERED
13 MAR 1914
MADRAS.
970
1.14
Q26:38.412 UR
N14
125113

உ

வேலுமயிலுந் துணை.

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
13 MAR 1914
MADRAS.

970
1.14

திருப்போரூர் ஆண்டவர்
இரட்டைமணிமாலை.

இது
சென்னை அடைக்கலபுரம்
நிவாஸர் ம-ள-ள-ஸ்ரீ,
த. மதுரை பிள்ளையவர்கள்
குமாரரும்,
சென்னைப் பூலோகவியாஸன் பத்திராதிபர்
மஹாஞானபாநு சதாவதானம்
ஸ்ரீலஸ்ரீ பூ. மு. நாவலரவர்கள்
மாணவகருமாகிய

மதுரை-எல்லப்பப் பிள்ளை

அவர்களாலியற்றி

கையொப்பதாரரின் உதவியால்
பூலோகவியாஸன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச ௵ மாசி ௴ 20௳ கிருத்திகைப்போது ௸ சந்நி
தானத்தில் விநியோகிக்கப்பட்டது.

உ

வேலுமயிலுந்துணை.

சாற்றுக்கவிகள்.

இயற்றமிழ் போதனாசிரியர் சமரசபாஷிய சித்தாந்தம்
திவ்யகவி திருமயிலை ஸ்ரீமந்
ஸ்ரீராகவதாஸரவர்களியற்றிய
எண்சீர் விருத்தம்.

பூவோங்கும் போரிசிவ சுப்ர மண்யர்
    புனிதவடி யருளோங்க சென்னை யூர்வாழ்
மாவோங்கும் பூஞ்சோலை முத்து வீர
    மாணவனற் புகழோங்குங் கல்வி யாளன்
பாவோங்கு எல்லப்ப பாவல் லோன்றன்
    பயனோங்க விரட்டைமணி மாலை தன்னைத்
தாவோங்க வியற்றிதுய சொழித்தா னிந்நூல்
    தொல்லுருக் கணிபலவு முடைத்த தம்மா,

சென்னை பிராட்வே 90-வது நெம்பர்
ஸ்ரீ கபிலவிநாயக பஜனை சிற்சபை பஜனை ஆசிரியரும்,
ஸ்ரீலஸ்ரீ வீ. பா- குருநாதசுவாமிகளின் பிரதமமாணவகரும்
செந்தமிழுடவும் பிரசங்கக்கதிருமாகிய
பிருங்காசைலம்-தே. சி. கங்காதரபாலதேசிகர்
அவர்களாலியற்றிய
பதினான்குசீர்க்கழி நெடிலடியாசிரியசந்தவிருத்தம்,

கரிவளை புழைநெடுங் கரமெனத் திரண்டிடுங்
    கடற்றிரை பருகிமேற் கடிதேகி
கனிமலை மகளுரு வொடுவிசும் பிடைபாங்
    ததிர்மழை புனலதைக் கடைமாந்தர்
புரிவளை கதலியுந் தரும்பெரு மரியமுத்
    தமதொடு கொடுநிதம் புகழ்ந் தாட்ட
புகலவு மிலதுவ ளருசொல் பழனங்க
    ளணிகொளும் பொழிலொளிர் போரூரில் •
சரிவளை யளிமட வருமபுற கொருங்கிடத்
    தகதக வெனமயிற் றனிலேறி
தனிவள ரிலைவடி வேலொடு வருஞ்சா
    வணபவ னிணையடி சாண்கொண்டு

1446
894

விரிவளை மகிதனின் நயகுண மினிதுற
விளங்கும துரைதரு எல்லப்பன்
வியனவி ரிருமணி யலக்கலை யினிதெண
விளம்பினன் புலமையு ளுயர்வானே.

சென்னைப் பூலோகவியாஸன் பத்திராசிரியர்
மஹா ஞானபாநு-சதாவதானம்
ஸ்ரீலஸ்ரீ, பூ. மு. நாவலரவர்கள் கூறிய

விருத்தம்.

பூமாலைத் தேர்பொழுதிற் பெடையோடு சிறையளிகள்
பிறங்கு கோவில்
புகுந்திடவு வளர்மதிய முதகரங்கொண் டிதழ்வாசல்
பொதிப்ப மற்றைத்
தாமேலைப் போதுதின கரத்தாலக் கதவுதிறந்
தாகி மன்னும்
சரோருகத்தி லேரிவிழு மதகெழுநீர் தருவயலே
தாக்கப் போகுஞ்
வாமாலைச் சேனைசினை படுகளிறு துறத்திடவும்
வயங்கு கூட்ட
மன்றுநில விறிசென்ன சிதறிக்கன் னற்காடு
வாட்டத் தேனின்
மாமாலைத் தரளமது சொரியுந்தென் ஞட்டிலுயர்
வள்மாம் பேரி
வடிவேல னெமதையன் மரையடிக்கிங் கிரட்டைமணி
மாலை தந்தான்.

வெண்பா.

தந்தான் மதுரைவளன் றந்தானெம் பாவின்னுஞ்
சிந்தா வகைத்தமிழ்த் தேர்ச்சிபெற--முந்தாசீர்
வல்லப்ப னன்படக்கம் மன்னும் பெருமிதத்து
எல்லப்ப னெல்லப்ப னே.

உ

வேலுமயிலுந்துணை.

175113

திருப்போரூர் ஆண்டவன்

இரட்டைமணி மாலை.

காப்பு

நிம்ப நிழனிதியாய் நீடுதிருப் போரூர்வாழ்
தும்பிமத வேழந் துணையாங்க - டம்பத்
திரட்டையணி திண்டோள் செவ்வேளை யேத்தி
இரட்டைமணி மாலைசொல வே.

குருவணக்கம்:

சத்து வீறுந்தகை மலைப் போரூர்வ
சித்து வீறுந்திருமுரு கேசற்கின்
பத்துவீரப்பண் மாலைப கர்ந்திட
முத்து வீரக் குரவனை முன்னுவாம்,

அவையடக்கம்.

கற்றோர் குறைகூறார் கந்தன் றனைப்பணிய
மற்றோ ருறைப்பசர் மகி,

நூல்

வெண்பா.

தேராரு மாசடையான் செப்முகத்து நித்துவரும்
போரூரு மாசடையாப் பெம்மானே - யீராறு
கண்ணுடையா யெக்கணமுங் கற்றவர்க ணெஞ்சத்தின்
கண்ணுடையா யென்பிணிய கற்று. 1

கட்டளைக்கலித்துறை.

கற்றூர் கடமகத் துன்னவி னிக்குங் கனதரும
நற்று டுதித்திட நன்குண ரேன்கெடு நங்கையரின்
பற்று ழுழன்றே னுளங்கா ரிருள்பவ பாசமதைச்
சற்று கிலும்விட் டெழிற்பெற ஞானந் தனிதருளே. 2

வெண்பா.

அருளிலாத் தானவர்க ளார்வ மொழிக்கு
மருளிலா வின்பவுரு வாக்கு - மிருளிலாப்
பேரன்பா லிப்புவியிற் பேணுந் திருப்போரூர்
வீரன்கைக் கொண்டவடி வேல். 3

கட்டளைக்கலித்துறை

வடிவேற் கரங்கொடு வான்சிறை மீட்டவ மன்னுமிரு
வடியே பணிந்திடுங் கீரனுக் குற்ற வளமைபெறும்
வடிவே கரவு மனத்தா ருறவினை வாட்டுஞ்சுத்த
வடியார் குழும விறையவ நின்கழல் வாய்த்திடவே. 4

வெண்பா.

வேதப் பொருளுணரா வேதனைச்சி றைப்படுத்தும்
போதக் குருவேதாள் போற்றினேன் - காதகனை
முத்தி யளித்தாளு மூவாப் போரூரிறையே
வித்தையளித் தாளுமள வில். 5

கட்டளைக்கலித்துறை

வின்னேர் விழியுடை யார்தன் மயக்கு விசிதமெனுங்
கன்னேர் மனத்துழன் றேனல்லல் பட்டிந்தக் காசினியில்
பன்னேய் கடிந்து பழவினைநீத்துப் பதியளிக்க
நன்னே ரிறைஞ்சிடும் போரியம் நாதனை நாடுவதே 6

வெண்பா.

நாடுவது நின்கருணை நம்புவது நின்றுட்பண்
பாடுவது நின்புகழைப் பக்தியுடன் - றேடுவது
பாங்கான போரூரா பற்றெல்லாம் பாற்றுது
நீங்கா திருப்பை நிதம். 7

கட்டளைக்கலித்துறை.

நிதம்போற் றிடாதவர் நேசங்கருதேன் நிலையைதில்லா
மதம்போற் றிடுவோரிடஞ்சென் றுழன்ற மதியதில்லேன்
பதம்போற் றிடுகுறு மாமுனிக் குத்தமிழ்ப் பயனளித்தோய்
சதம்போற்றிடு மெனையன்புட னாண்டிடுந தற்பரனே. 8

வெண்பா.

பரவு மனத்தார் பவமறுத்திங் கின்பந்
தரவெதிர் நோக்குந்தகைபர - பிரவுபக
லற்றவரும் ஞானியர்க ளாக்க நிறைந்திலகப்
பற்றவரும் போரூர்ப் பதி. 9

கட்டளைக்கலித்துறை.

பதிவெண்டு நின்னடி யார்பணி வேண்டும் பதமருளத்
துதிவேண்டு நின்பா லடைந்திட வேண்டுஞ் சுகங்கொளவே
மதிவேண்டு புல்லறி வாளரை நான்மதியாதவர
மதிவேண்டு மன்னைக் கருவூரை வேண்டிலேன் மாதவனே. 10

வெண்பா,

நேசக் குறமகளை நீமணந்த வாற்றில்பவ
பாசக் குறைகூறிப் பற்போதும்-மாசவிர
கானவனே யென்றாலுங் கன்மவினை போக்கவெனக்
கானவனே யென்பேன்க ணிந்து. 11

கட்டளைக்கலித்துறை

கனிவது மில்லேன் றணிவது மில்லேன் காயவர்களை
முனிவது மில்லேன் முயல்வது மில்லேன் முழுதுணர
நனிவது மில்லேன் நகர்வது மில்லேன் நறுமலர்த்தாள்
நினைவது மில்லேன் சமரா புரிக்குக நின்னருளே. 12

வெண்பா.

அருவுருவே யன்பே யதிமணமே யென்ற
னிருவினையு மும்மலமு மேங்க - குருவுருவே
மஞ்சாடு மாமலைவாழ் வள்ளிதெய்வ யானையொடு
மஞ்சைமீ தேறிவரு வாய் 13

கட்டளைக்கலித்துறை

வாயார நின்றனை வாணர்கள் வாழ்த்தி வழியுற்றன
ரோயாக் கவலையிலுற்றே யறுதின யொப்பிபெரும்
நாயா யுழன்று நமன்கைப் படாமுன் நலமருளுந்
தாயா மெனக்கருள் தந்தையாம போரித் தயாநிதியே. 14

வெண்பா.

நிதிபோ முயர்நிலைபோம் நீணிலத்தி லுய்யுங்
கதிபோந் துட்டக்கனம்போங் - குதிபோகா
தென்றுவளர் பேரூரி னேந்தலனை யண்போ
நன்று பணியாத நாள். 15

125113

கட்டளைக்கலித்துறை.

காளவங் கொண்டு கனிபுரியாது நகுமசடர்
மாளவங் கையயில் கொண்டவனே மறை மாமுதலே
தாளவ மில்லார் சூழ்ந்திடும் போரித் தராதலனே
கோளவல் நீக்கிட நின்னருட் டாடணைக் கொண்டனனே. 16

வெண்பா.

கொண்டே னுளத்தையாட் கொண்டோ யுனதன்பைக்
கண்டே னுளத்திற் களிப்புறவே - சண்ட
னுரத்தைத் துணித்தோ னுவந்தளித்த வையா
கரத்தா லணைக்கக் கருது. 17

125113

கட்டளைக்கலித்துறை

கருந்தேன் விழிமட வார்கடம் மாசைக் கருதிநித
மிருந்தேன் றொலையா வினையா லுழன்றிங் கிடர்க்கடலில்
வருந்தேன் நினதரும் பாதப் பொலிவளி மாந்திடிலோ
மருந்தேன் பிணிக்குச் சமராபுரிவரு மாமணியே. 18

வெண்பா.

மணியாரம் பூண்டவிரு மங்கையர்கள் சூழு
மணியாரம் பூண்ட வழகா - பணியாரும
மஞ்ஞைமீ தூர்ந்துவரும வண்டிருப்பேர ரூராசே
[illegible]னைக் கொண்டேன்றுள். 19

கட்டளைக்கலித்துறை

தாளே பணிய வன்தயறி யாமலித் தாரணியில்
நாளே கழித்திங் கவலமாய் நின்றிடும நாயினெனை
யாளே வெனக்கா தரவில்லை யென்வினை யாற்றிடற்கு
வாளே யிராமல் வரமருள் போரி வளாமுதே. 20

இரட்டைமணிமாலை,

முற்றிற்று.

கையொப்பகாரர்களின் நாமதேயங்கள்.

முருகக்கடவுள்	அடைக்கலபுரம்
ஆறுமுகக்கடவுள்	,,
பிச்சை முத்து மேஸ்திரி	மண்ணடி
ச. பச்சையப்பன் பிள்ளை	அடைக்கலபுரம்
செராங். முனிசாமி பிள்ளை	,,
சோ-சிங்காரம் பிள்ளை	
எ-மதுரை நாயகம்	
அ-முனிசாமி பிள்ளை	
பொ-அந்தோனி பிள்ளை	
பொன்னன் பிள்ளை	
எஸ்-பி-சுப்பராய முதலியார்	
எம். அந்தோனி பிள்ளை	Fort St, George Barrcks Mast Waork sh
வி. தங்கவேலு பிள்ளை	
எம். பரஞ்சோதி பிள்ளை	
சி. துளிர்க்காணம்பிள்ளை	

600 008
175113

9B
3-68